அசல்

17.3.38 K.M. Sundaram

அசல் -1

**K. M. SUNDARAM,** B. A., L. T.,
**HEAD MASTER,**

KALYANASUNDARAM HIGH SCHOOL.
TANJORE.

Dated 17. 3. 1938.

தாக்ஷிணாத்திய கலாநிதி மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ.வே. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் திவ்ய சமுகத்திற்குத் தஞ்சை கலியாண சுந்தரம் உயர்தரக் கலாசாலைத் தலைமை ஆசிரியன் K.M. சுந்தரம் அய்யர் பணிவுடன் விக்ஞாபித்துக் கொள்வது:-

எங்கள் கலாசாலை மாணவர் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தை இந்த மார்ச்சு மாதம் 27, 28ம் தேதிகளில் நடத்துவதாக எண்ணியுள்ளோம். எங்கள் பாடசாலை ஆசிரியர் S. கிருஷ்ண சாமி அய்யரும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் பால சுப்ரமணிய அய்யர் குமாரர் A.B. விசுவநாத அய்யரும் தங்களைச் சென்ற டிசம்பர் மாதம் சந்தித்து எங்கள் பள்ளிக் கூடத்திற்கு ஒருமுறை விஜயம் செய்து பாடசாலையையும் எங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று நேரே பிரார்த்தித்துக் கொண்டது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இவ் வருஷாந்திர விழாவே அதற்குத் தகுந்த சமயம் என்று தாங்கள் கருதி இந்த வேண்டுகோளுக்கு இணங்க வேண்டுமெனத் தங்களை மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். இங்கிருந்து தகுந்தவர்களைச் சென்னைக்கு அனுப்பித் தங்களை அழைத்துவர ஏற்பாடுகள் செய்கிறோம்.

ஆதலால் தாங்கள் அவசியம் எங்களுடைய அழைப்புக்கிசைந்து 27, 28ம் தேதிகளில் இங்கு வந்திருந்து எங்களுக்குத் தங்களுடைய தரிசனமும் ஆசீர்வாதமும் கிடைக்குமாறு அருள வேண்டுகின்றேன்.

தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்

K.M. Sundaram

அசல்

17.3.38 K.M. Sundaram

அசல் -1

#12

Copied 193, 194

1938

A 173-174

53